ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

| | |
|---|---|
| வெளியிடுபவர் | நாணயத் திணைக்களம் |
| திகதி | 2017.07.12 |

## Ceylon Tea இன் 150ஆவது ஆண்டு நிறைவினைக் குறிக்கும் ஞாபகார்த்த நாணயக் குத்தி

Ceylon Tea இன் 150ஆவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடுவதற்கும் இலங்கையின் முக்கியமானதும் நீண்ட கால ஏற்றுமதி நோக்குடைய பொருளாக தேசிய பொருளாதாரத்திற்கான அதன் பங்களிப்பை அங்கீகரிக்கின்ற விதத்தில் ரூ.10 முகப்புப் பெறுமதியினைக் கொண்ட ஞாபகார்த்த நாணயக் குத்தியொன்றினை இலங்கை மத்திய வங்கி வெளியிட்டிருக்கின்றது.

நாணயக் குத்திகளின் முதலாவது தொகுதி கௌரவ நிதியமைச்சர் திரு. மங்கள சமரவீர அவர்களுக்கும் பெருந்தோட்டத் தொழில்துறையின் கௌரவ அமைச்சர் திரு. நவீன் திஸ்ஸநாயக்க அவர்களுக்கும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் முனைவர் இந்திரஜித் குமாரசுவாமி அவர்களினால் 2017.07.12 அன்று இலங்கை மத்திய வங்கியில் நடைபெற்ற வைபவத்தில் வைத்து அலுவல்சார் ரீதியாகக் கையளிக்கப்பட்டது.

இக்குத்தியானது இன்றிலிருந்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினூடாகச் சுற்றோட்டத்திற்கு வெளியிடப்படுவதுடன் சுற்றோட்டத்திலுள்ள ஏனைய நாணயத் தாள்கள் மற்றும் குத்திகளுடன் கொடுப்பனவுகளுக்காகப் பயன்படுத்தலாம்.

நாணயக் குத்தியின் விபரம்

<u>முன்பக்கம்</u>




குத்தியின் மையத்திலுள்ள சிங்கச் சின்னமானது இலங்கை தேயிலைச் சபையின் அறிவார்ந்த சொத்தாக வர்த்தமானப்படுத்தப்பட்ட 'Ceylon Tea – தரத்தின் அடையாளம்' இனைச் சித்திகரிக்கின்ற ஓர் வடிவமாகும். குத்தியின் மேற்பரப்பானது இலங்கையில் தேயிலைக் கைத்தொழிலின் (முன்னர் சிலோன் என அறியப்பட்டது) ஆரம்ப ஆண்டான 1867 மற்றும் அதன் 150ஆவது நிறைவு ஆண்டான 2017 போன்ற குறிகாட்டல்களினால் சித்திகரிக்கப்பட்டுள்ளது. சின்னத்தின் இரண்டு பக்கமும் 'இரண்டு இலைகள் மற்றும் ஒரு மொட்டு' போன்ற படங்களினால் பூரணப்பட்டுள்ளதுடன் இது சிறந்த Ceylon Tea உற்பத்தியை உறுதி செய்வதற்கான உயர்ந்த இலை நியமத்தினைக் குறிக்கின்றது. நாணயத்தின் கீழ் விளிம்பானது Ceylon Tea இன் 150ஆவது ஆண்டுக் கொண்டாட்டத்திற்காக இந்நாணயம் வழங்கப்பட்டுள்ளதென்பதனைக் குறிக்கின்றது.

<u>பின்பக்கம்</u>




முகப்புப் பெறுமதியான "10" பெரிய இலக்கங்களில் காணப்படுவதுடன் குத்தியின் மையப்பகுதியில் பெறுமதியானது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் காணப்படுகின்றன. குத்தியின் கீழ்ப்பகுதியில் 2017 எனும் ஆண்டு குறிக்கப்பட்டுள்ளது. குத்தியின் விளிம்பில் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளிலான நாட்டின் பெயர் கீழ்ப்பகுதியில் இரண்டு நெல் மாலைகளின் மூலம் காணப்படுகிறது.

விபரங்கள்:

| | |
|---|---|
| நாணய இனம் | ரூ.10 |
| நாணய வகை | சுற்றோட்ட நியமம் |
| எண்ணிக்கை | 5,000,000 குத்திகள் |
| உலோகம் | துருப்பிடிக்காத இருப்பு – ஏஜஎஸ்ஜ 430 |
| விட்டம் | 26.40 மி.மீ |
| தடிப்பு | 2.30 மி.மீ |
| வடிவம் | பதினொரு கோணி |
| ஓரம் | வெற்று |

**மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து தொடர்புகொள்ளவும்:**

இலங்கை மத்திய வங்கி : தொலைபேசி: 0114387405/ 0112477354
மின்னஞ்சல் : currency@cbsl.lk

இலங்கை தேயிலைச் சபை : தொலைபேசி: 0112587814/ 0112587341
மின்னஞ்சல் : promotion@pureceylontea.com

கண்காணிப்பாளர்
நாணயத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
இல.30, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 01
இலங்கை